Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC.325/2022 PW-1**

Name : பாலு
Father / Husband name : கோவிந்தசாமி
Village : திண்டிவனம்
Age : 48
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.03.2026

Complainant present. Accused present. Both side counsel present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ( நேரம் 11.33 - 11.42 )**

ம.சா.ஆ. 9, ம.சா.ஆ. 10, ம.சா.ஆ. 11 ஆகிய ஆவணங்கள் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிரி என்னையும் எனது குடும்பத்தையும் தெரியாது என்று சொன்னதால் இந்த ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் கணவர் என்னிடம் கடன் வாங்கியது சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் எதிரியின் கணவர் என்னிடம் கடன் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். ராஜ்குமார் என்பவர் என்னிடம் கொடுத்த காசோலையின்மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, அவர் பணம் தருவதாக சொன்னார். ராஜ்குமார் என்பவர் என்னிடம் கொடுத்த காசோலை காலாவதி ஆனதால் எதிரியின் காசோலையை அவரின் கணவர் எனது அப்பாவிடம் கொடுத்தார், அதனை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அந்தக்கடனுக்கும், இந்தக்கடனுக்கும் சம்மந்தம் இல்லை.

2. எனது அப்பாவிடம் எதிரியின் கணவர் வாங்கிய கடனை எதிரியின் காசோலைகள் மூலமாக இரண்டு தவணையாக கொடுத்து பைசல் செய்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய்

சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்தப்பணமும் வாங்கவில்லை, வழக்கின் காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை, அதனால் இந்த மனு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.